***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.167/2021 – P.W. 6 (LW7)***

| | |
|---|---|
| *Name* | முருகேசன் |
| *Father/Husband's Name* | தங்கராசு |
| *Village* | உடையார் தெரு, |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *50* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.11.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை நான் கடந்த 06.04.2021ம் தேதி இரவு 09.00 மணிக்கு வடக்கு உடையார் தெரு அருகே உள்ள ஆற்றுபாலம் சாத்தனூரை சேர்ந்த ஒரு பெண்ணின் தாலிச்செயினை கருப்பு நிற pulzar ல் வந்த இரண்டு நபர்கள் அறுத்து சென்றதாக கேள்விப்பட்டு சம்பவம் சென்று பார்த்து அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். மறுநாள் 07.04.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், பக்கத்து வீட்டுக்காரரான மதியழகன் என்பவரும் திருட்டு சம்பவம் நடந்த இடத்தில் நின்று கொண்டிருந்தபோது மேற்படி சம்பவம் குறித்து வடுவூர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நானும், மதியழகன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். (**பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கையெழுத்து எந்த இடத்தில் போட்டு கொடுத்தேன் என்றால் சம்பவ நடந்த பாலத்து கட்டையிலேயே போட்டுக்கொடுத்தேன். என்னுடன் யார் கையெழுத்து செய்தது என்றால் மதியழகன் என்பவர் போட்டுக்கொடுத்தார். நான் போட்டுக்கொடுத்தது முதல் கையெழுத்தா அல்லது இரண்டாவது கையெழுத்தா என்றால் இரண்டாவது கையெழுத்து. அசா.1 ஐ எனக்கு உறவினாரா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்துவிட்டு தற்சமயம் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.